Rouge Valley
HEALTH SYSTEM

The best at what we do.

---

# செய்தி வெளியீடு

## றூஷ்வலி சபை ஒன்றிணையும் திட்டத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு உடன்படுகின்றது

*$3 மில்லியன் மூலதனத் திட்டமிடல் நிதியுதவிக்காக அமைச்சுக்கு RVHS நன்றி செலுத்துகின்றது*

**மார்ச் 15, 2014** – றூஷ்வலி சுகாதாரத் திட்ட அமைப்பின் (RVHS) இயக்குநர் சபை, ஸ்காபரோ மற்றும் மேற்கு டூறாம் சமூகங்களுக்கு வழங்கும் நோயாளர் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக ஸ்காபரோ மருத்துவமனையுடன் (TSH) ஒன்றிணைவதற்குத் தனது ஆதரவை இன்று மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் RVHS சபை உறுப்பினர்கள், RVHS மருத்துவத் தலைவர்களின் முழு ஆதரவுடன், ஒன்றிணைவதற்கான கலந்துரையாடல்கள் தொடரப்பட வேண்டும் என்ற ஏகமனதான, தகவலறிந்த ஒரு முடிவை எடுத்தனர்.

ஒன்றிணைவதற்கான அரசாங்கத்தின் ஆதரவைச் சுகாதாரம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சர் டெப் மாத்யூஸ் (Deb Matthews) "ஸ்காபரோ, மேற்கு டூறாம் பகுதி, அத்துடன் அதற்கு அப்பாலுமுள்ள மக்களுக்குச் சேவைபுரியும் ஒரு உலகத் தரம்வாய்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரச் செயல்திட்ட உருவாக்கத்தின் தொலைநோக்கு" எனக் குறிப்பிட்டுள்ளதையும், ஆரம்ப மூலதனச் செயல்பாட்டுக்கு உதவும்பொருட்டு முதற்படியாக $3 மில்லியன் நிதி வழங்குதலை அமைச்சு உறுதிப்படுத்தும் என்பது பற்றியும் மகிழ்வடைவதாக RVHS சபைத் தலைவர் ஜோன் வைட்மேன் (Joan Wideman) கூறினார்.

RVHS மற்றும் TSH க்கு அமைச்சர் மாத்யூஸ் (Matthews), வெள்ளிக்கிழமை அனுப்பிய கடிதத்தில், "மருத்துவமனைகளுக்கான மூலதன மீள் அபிவிருத்தியை நோக்கிய தேவைக்கான திட்டங்கள்/சேவைகள், செயற்பாட்டு மாதிரிகள் மற்றும் முக்கிய படிநிலைகளைப் பூர்த்தி செய்வதற்கு அந்த மூலதனம் TSH மற்றும் RVHS க்கு உதவும் எனக் குறிப்பிட்டார்.

**RVHS சபையின் பிரேரணை**

இன்றைய பொதுக்கூட்டத்தில் RVHS இயக்குநர் சபை பின்வரும் பிரேரணையை ஏகமனதாக அங்கீகரித்தது.

“றூஷ்வலி சுகாதாரத் திட்ட அமைப்பும் (RVHS ), ஸ்காபரோ மருத்துவமனையும் (TSH) ஒரு உதவியளிக்கப்பட்ட ஒருங்கிணைப்புச் செயற்திட்டத்தில் இணையுமாறு மையக் கிழக்கு உள்ளகச் சுகாதார ஒருங்கிணைப்பு வலையாக்கத்தினால் (Central East LHIN) மார்ச் 27, 2013ல் அறிவுறுத்தப்பட்ட அதேசமயம்; அத்துடன்

தீவிர சமூக மற்றும் பங்குதாரரது ஈடுபாட்டை உள்ளடக்கிய ஒரு செயற்திட்டத்தை RVHS மற்றும் TSH மேற்கொண்டதுடன், அது RVHS ம் TSH ம் இணைவதைப் பரிந்துரைக்கும் நோயாளர் இணைப்புத் திட்டமிடல் அறிக்கைக்கு (நவம்பர் 12, 2013) இட்டுச்சென்ற அதேசமயம்; அத்துடன்

RVHS மற்றும் TSH சபைகள், சுகாதாரம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு அமைச்சிடமிருந்தும் (MOHLTC) மையக் கிழக்கு LHIN இடமிருந்தும் பெறப்படும் செயற்திட்ட நிதியுதவி மற்றும் சட்டரீதியில் விடாமுயற்சி, அத்துடன் ஸ்காபரோவிலும் மேற்கு டூறாம் பகுதியிலும் மருத்துவமனை வளாகங்களைச் சாத்தியப்படக்கூடியவாறு மீளபிவிருத்தி செய்வது பற்றிய ஆய்வு மற்றும் திட்டமிடலுக்கான மூலதன நிதியுதவி ஆகியவை பூர்த்திசெய்யப்படும் என்ற நிபந்தனையின்கீழ் நவம்பர் 12, 2013ல் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றிணைப்பை அங்கீகரித்த அதேசமயம்; அத்துடன்

எமது பன்முகச் சமூகங்களும் பங்குதாரர்களும், RVHS மற்றும் TSH இணைவதற்கும், நோயாளர் பராமரிப்புத் தரத்தையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்காக இக்கூட்டுத்தாபனங்களின் ஒன்றிணைப்பு வழங்கும் வாய்ப்புக்களுக்கும் தொடர்ந்து ஆதரவு தெரிவித்த அதேசமயம்; அத்துடன்

RVHS ம் TSH ம் ஒருங்கிணைவதற்கு, மையக் கிழக்கு LHIN தொடர்ந்து ஆதரவளிப்பதுடன், இந்நோக்கத்திற்காக எடுக்கப்படும் விடாமுயற்சிகளுக்கான செலவுகளின்பொருட்டு $3.8 மில்லியன் முதலீட்டுக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கும் அதேசமயம்; அத்துடன்

ஸ்காபரோ, மேற்கு டூறாம் பகுதி அத்துடன் அதற்கு அப்பாலுமுள்ள மக்களுக்குச் சேவைபுரியும் ஒரு உலகத் தரம்வாய்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரச் செயல்திட்ட உருவாக்கத்தின் எங்களது தொலைநோக்கை MOHLTC எங்களுடன் பகிர்ந்துகொள்வதுடன், அத்தொலைநோக்கு சரியான பராமரிப்பை, சரியான நேரத்தில், சரியான இடத்தில் வழங்குவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளுடன் முற்றாக ஒருநிலைப்படுத்தப்படும் அதேசமயம்; அத்துடன்

மூலதனத் திட்டமிடல் வேலையும், ஒன்றிணைக்கப்பட்ட மருத்துவமனைத் திட்டம் இரு கூட்டுத்தாபனங்களும் ஒன்றிணைவதை நிறைவேற்றுவதற்காக, ஒரு நிலையான நிதியுதவித் திட்டத்தை உருவாக்கிப் பூர்த்திசெய்வதைப் பொறுத்து, மேலும் மேம்பட்ட திட்டமிடல் தேவைப்படுகின்றதென்பதை RVHS அங்கீகரித்திருக்கும் அதேசமயம்; அத்துடன்

மருத்துவமனைகளின்  மீளபிவிருத்திக்கான அடுத்த முக்கிய படியாக ஸ்காபரோ மற்றும் மேற்கு டுறோம் பகுதி சமூகங்களுக்கும், செயற்திட்டம்/சேவை அத்துடன் மூலதனத் திட்டமிடலுக்கான எதிர்கால நிகழ்வுமுறைகளுக்கான செயற்பாட்டு மாதிரிகள் முதலியவற்றின் அபிவிருத்திக்காக $3 மில்லியன் ஆரம்ப நிதியுதவியை வழங்க MOHLTC இணங்கியுள்ள அதேசமயம்; அத்துடன்

ஒன்றிணையும் வாய்ப்புக்களையும், TSH உடன் ஒன்றிணைவதையும் தொடர்ந்து முன்நோக்கிச் செல்வதற்கும் RVHS உறுதிபூண்டுள்ள அதேசமயம்; அத்துடன்

TSH உடன் இணைவதற்கான நடைமுறைச் சாத்தியம் பற்றி RVHS க்கு கூடிய நம்பகத்தன்மை தேவைப்படும் அதேசமயம்,

அது தீர்க்கப்படும்போது RVHS இயக்குநர் சபையானது:

1. RVHS ம் TSHம் நிலையான நிதியுதவித் திட்டத்தின் அடிப்படையில் இணைவதனால்       சமூகங்களுக்குக் கிடைக்கும் நன்மைகளுக்கு தனது ஆதரவை உறுதிப்படுத்துகின்றது.
2. பின்வருவன உள்ளடங்கலாக TSH உடன் இணையும் செயற்திட்டத்தில் தொடர்ந்து  முன்நோக்கிச் செல்வதற்கு அங்கீகாரமளிக்கின்றது:
   அ) ஒன்றிணையும் செயற்திட்டத்தின் மூலம் TSH உடன் கட்டியெழுப்பப்பட்டுள்ள அதிகாரத் தொடர்பைப் பலப்படுத்துதல்
   ஆ) ஒன்றிணையும் செயற்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ள பணியை முடிவுறச் செய்தலும் கட்டியெழுப்புதலும்
   இ) இணைந்து செயலாற்றுதலை முன்னேற்றுதலும் மருத்துவ ஒருங்கிணைப்பு வாய்ப்புக்களைத் திட்டமிடுதலும்; அத்துடன்
3. தெளிவான நோக்கங்களையும் சாதிக்கக்கூடியவற்றையும் முன்கூட்டியே அறிந்திருத்தல், TSH உடன் இணைந்து மூலதனத் திட்டமிடலை மேற்கொள்வதற்கு $3 மில்லியனை MOHLTC இடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றது.”

“மூலதன மீளபிவிருத்தி வாய்ப்புகளுக்கு ஆரம்ப நிதியுதவியை வழங்கியமைக்காக அமைச்சுக்கு நாங்கள் நன்றி கூறுகின்றோம். தேவைப்படும் செயற்திட்ட மூலதனங்களை அங்கீகரிப்பதுடன், நிதி வழங்கும் பங்குதாரர்களுடன் இவற்றைக் கலந்தாலோசிப்பதற்குப் பொருத்தமான திட்டங்களை உருவாக்க வேண்டிய தேவை எங்களுக்கு இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்.  ஒருங்கிணைப்புப் பற்றி ஆராய்வதுடன் மேலும் ஆய்வுகளையும் நடாத்துவோம்” என்று வைட்மேன் (Wideman) கூறினார்.

“விரிவான ஆராய்வைப் பூர்த்திசெய்து சமூகத்திடமிருந்து தெரிந்துகொண்ட பின்னர், இரு மருத்துவமனைக் கூட்டுத்தாபனங்களின் ஒன்றிணைப்புத்தான் நோயாளரது அணுகுதலை மேம்படுத்தவும், எதிர்வரும் பல ஆண்டுகளுக்கு நோயாளர்களுக்கு

வழங்கும் பராமரிப்புத் தரத்தை நிலைநிறுத்தவும் சிறந்த வழி என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.'' என்று வைட்மேன் (Wideman) கூறினார்.

“கடந்த வருடத்தில், ஒன்றிணைப்புப் பற்றிய கலந்துரையாடலின் ஒரு பகுதியாக பங்குதாரர்கள் இருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் கடினமாக உழைத்துள்ளோம். எதிர்காலத்தில் எங்களுக்குத் தேவைப்படும் வசதிகள் பற்றியும், வளர்ந்துவரும் சனத்தொகைக்குச் சேவை செய்வதற்கும், பழமையடையும் உள்கட்டமைப்பை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகள் பற்றிய கலந்துரையாடலுக்கும் இந்தப் பங்குதாரர்களை நாங்கள் தொடர்ந்து ஈடுபடுத்துவோம். எமது TSH பங்காளிகள், சமூகங்கள், ஊழியர்கள், சபை அங்கத்தவர்கள், மருத்துவத் தலைவர்கள் அத்துடன் எங்களுடன் இதுவரை இணைந்து பணியாற்றியமைக்காக அரசியல் தலைவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.'' என்று கூறிய தலைவரும் RVHS ன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருமாகிய ரிக் ஃகேண்டர்ட்டன் (Rik Ganderton), “இந்த நிதியுதவி ஸ்காபரோவிலும் மேற்கு டூறாம் பகுதியிலும், உயர்தர சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை நாங்கள் கூடியளவில் அணுகக்கூடியதாகவும் இருக்கும்,'' என்று மேலும் கூறினார்.

**றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) — நாம் செய்வதில் அதி சிறந்தவை:**

றூஷ்வலி சுகாதார சேவைத்திட்ட அமைப்பு (RVHS) ஓர் அதிசிறந்த தீவிர கவனிப்புச் சமூக வைத்தியசாலையாகும். 24/7/365 அவசர சேவை, மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், அறுவைச் சிகிச்சை, மனநல வைத்தியம், பிராந்திய இருதய வைத்தியம் போன்ற சேவைகளை உள்ளடக்கிய பல திட்டங்களை அது கொண்டிருக்கும்.
றூஷ்வலி வைத்தியசாலை இரண்டு சமூக வைத்திய வளாகங்களான ஸ்காபரோ சென்ரினறி வைத்தியசாலை, மேற்கு டூறாமில் உள்ள ஏஜாக்ஸ் மற்றும் பிக்கரிங்கில் உள்ள வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல சுகாதார நிலையங்களைக் கொண்டுள்ளது.

தொடர்பு -
David Brazeau
Director
Public Affairs, Community Relations and Telecommunications
Rouge Valley Health System
647-294-8885
dbrazeau@rougevalley.ca
www.rougevalley.ca